DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | |
|---|---|---|
| STC.NO. 1297/2017 | Crime No.: | Station : |
| PW : 1 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. சீனிவாசன் | Caste | |
| Father's Name | சண்முகம் | Calling | |
| Village | புளியம்பட்டி | Religion | |
| Taluk | | Age | 41 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 11.08.2023 |

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். நான் பதிவு செய்து பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேனா என்றால் பதிவு செய்யவில்லை. எதிரிக்கு பணத்தை நான் எப்படி கொடுத்தேன் என்றால் ரொக்கமாக கொடுத்தேன். எதிரிக்கு நான் எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் எதிரியின் அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். எதிரிக்கும் எனக்கும் எவ்வளவு நாள் பழக்கம் என்றால் சுமார் 4 வருடங்கள் பழக்கம். எதிரியிடம் பணம் கொடுக்கும் போது உடன் யாராவது இருந்தார்களா என்றால் இல்லை எதிரி மட்டும் தான் இருந்தார். எதிரி என்னிடம் எவ்வளவு பணம் கேட்டார் என்றால் ரூ. 20,00,000/-. முழுமையாக பணத்தை கொடுக்காமல் நான் எதற்காக ரூ.15,62,500/- கொடுத்தேன் என்றால் என்னிடம் அவ்வளவு தொகை தான் இருந்தது. மீதி தொகையை நான் எதிரிக்கு தருகிறேன் என்று சொன்னேனா என்றால் இல்லை, எதிரியும் என்னிடம் மீதி தொகையை கேட்கவில்லை.

2. எதிரி என்ன தேவைக்காக பணம் வேண்டும் என்று என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. எதிரிக்கு கொடுத்தது போல் நான் வேறு சில நபர்களுக்கும் பணம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கு பணம் கொடுக்கும் போது எத்தனை சதவீத வட்டிக்கு கொடுத்தேன் என்றால் வட்டிக்கு கொடுக்கவில்லை, கைமாற்றாகத்தான் கொடுத்தேன். எதிரி எனக்கு காசோலை எண் 691375 என்ற எண் கொண்ட காசோலையை

தான் ரூ.62,500/-க்கு கொடுத்தார் என்றும், மற்றொரு காசோலையான எண் 566424 என்ற எண் கொண்ட காசோலையை security க்காக கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி என் மீது திருப்பூர் மாவட்டம் அனுப்பர்பாளையம் காவல் நிலையத்தில் கந்துவட்டி வசூலிப்பதாக சொல்லி புகார் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி எனக்கு ரூ.62,500/- மட்டும் தான் தரவேண்டியுள்ளது என்றால் சரியல்ல. எதிரி எனக்கு கொடுத்த காசோலை இரண்டையும் முழுவதும் பூர்த்தி செய்து கொடுத்தாரா அல்லது கையெழுத்து மட்டும் போட்டுக் கொடுத்தாரா என்றால் முழுவதுமாக பூர்த்தி செய்து கொடுத்தார்.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.